DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 328/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.சொரிமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 07th **November 2025.**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று செங்கோட்டையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு அய்யாபுரம் காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது கடந்த 09.08.2016 ம் தேதி 9 மணிக்கு தலைமைக்காவலர் மருதப்பபாண்டியன் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின்பேரில் அங்கு சிகிச்சையில் இருந்த சின்னராமர் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.50/2016 ச/பி. 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4ன் படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் நகல்களை சங்கரன்கோவில் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், மற்ற

நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது பார்வைக்கு வைத்தார். அவர் பதிவு செய்த **முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.08.2016 ம் தேதி மதியம் 1.30 மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மாரிக்காளை, ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சின்னராமர், சுந்தரி, செல்லத்துரை, சுப்புதாய், மாரிக்காளை, ஆனந்த் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த தலைமைக்காவலர் மருதப்பபாண்டியன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரி அருண்குமாரை அன்றையதினமே 15.30 மணிக்கு புதுகுளம் நூலகம் முன்பு வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்தேன். எதிரி செல்வி, அருள், பால்ராஜ் ஆகியோர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. 14.08.2016 ம் தேதி காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை செய்த அரசு மருத்துவர் தேவிபிரபாகல்யாணி அவர்களை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். 28.10.2016 ம் தேதி வழக்கின் புலன்விசாரணை முடித்து 1,3,4 எதிரிகள் மீது ச/பி.294(பி),323, 506(2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4 ன்படியும், 2 ம் எதிரி செல்வி மீது ச/பி.294(பி),323, 324, 506(2) இதச ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். .

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சம்பவமானது 08.08.2016 ம்தேதி 21.00 மணிக்கு நடைபெற்றதாக முதல்தகவல்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் குறித்து 09.08.2016 ம் தேதி 12.30 மணிக்கு தகவல் கிடைத்ததாக முதல்தகவல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ,சா.2 சிகிச்சைக்கு சேர்ந்தவுடன் மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் கிடைத்தது என்றால் சரிதான். சுந்தரியின் காயச்சான்றில் அவர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் 09.08.2016 ம் தேதி அதிகாலை 1 மணிக்கு சேர்ந்ததாகவும், சின்னராமரின் காயச்சான்றில் அவர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் 09.08.2016 ம் தேதி அதிகாலை 1.15 மணிக்கு சேர்ந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 09.082016 ம் தேதி காலை 10 மணிக்கு சின்னராமரிடமிருந்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் 4 எதிரிகளும் அவரது வீட்டின் முன்பு இருந்த தட்டியை அடித்து நொறுக்கியதாக குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. அ.சா.1 எனது விசாரணையில் 4 எதிரிகளும் சேர்ந்து தன்னை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. 2 பேர் அடித்து கீழே தள்ளியதாக கூறியுள்ளார். அ.சா.1 எனது விசாரணையில் எதிரி அருண்குமார் தனது உயிர்தடத்தில் மிதித்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 எனது விசாரணையில் எதிரி அருண்குமார் தனது இருகைகளின் முழங்கையிலும் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தியதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 எனது விசாரணையில் 4 எதிரிகளும் அவரை கீழே இழுத்துப்போட்டு குத்தியதாக கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. மருத்துவர் தேவிபிரபாகல்யாணி எனது விசாரணையில் அ.சா.1 சின்னராமர் 08.08.2016 ம் தேதி இரவு 11.30 மணிக்கும், அ.சா.2 சுந்தரி அதே தேதியில் இரவு 10.00 மணிக்கும் சிகிச்சைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி மருத்துவர் அ.சா.2 ன் வலதுகை சுண்டுவிரலில் காயம் இருந்ததாக என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இடது கை சுண்டுவிரலில் காயம் இருந்ததாக கூறினார். மேற்படி மருத்துவர் அ.சா2 ன் இடது கன்னத்தில் காயம் இருந்ததாக

என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அசா.2 எனதுவிசாரணையில் தனது கணவர் அ.சா.1 யை 4 எதிரிகளும் கையால் அடித்து கீழே தள்ளி அவரது காலை பிடித்து இழுத்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 எனது விசாரணையில் அ.சா.1 க்கு வலதுகாலில் காயம் இருந்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் அ.சா.2 க்கு எந்த கை சுண்டுவிரலில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எனது விசாரணையில் அவரிடம் சிகிச்சைக்கு வந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களை அடையாளம் தெரிந்த 2 ஆண் மற்றும் அடையாளம் தெரிந்த 2 பெண் நபர் தாக்கியதாக கூறினார்கள் என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மருத்துவர் அ.சா.1 ன் கன்னத்திலும், அ.சா.2 ன் வயிற்றிலும் காயம் இருந்ததாக எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் அ.சா.1 ன் கன்னத்தில் காயம் இருந்ததாகவும், அ.சா.2 ன் வயிற்றில் காயம் இருந்ததாகவும் குறிப்பிடவில்லை. அ.சா.1 மற்றும் எதிரிகளுக்கு இடையில்இடம் சம்பந்தமான பிரச்சனை இருந்ததால்தான் சம்பவம் நடைபெற்றது என்று எனது விசாரணையில் துலங்கும் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவ இடம் தங்களுக்கு பாத்தியப்பட்டது என்று காண்பிக்கும் ஆவணம் ஏதும் என்னிடம் அளித்தார்களா என்றால் இல்லை. அ.சா.3 செல்லத்துரை எனது விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று சம்பவ இடத்திற்கு சத்தம் கேட்டு வந்ததாகவும், அவ்வாறு சத்தம் கேட்டு வந்தபோது அங்கு நான்கைந்து நபர்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று நான் கூறிய சாட்சிகள்முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், நான் கூறியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அதனால்தான்

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது விசாரணையில் தெரிவித்துள்ளதற்கு மாறாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துளளார்கள் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா2 இருசக்கரவாகனத்தில் பயணிக்கும்போது தவறி விழுந்து அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி அவர்கள் புகார் மனு அளித்தார்கள் என்றாலும்,அந்தபுகார் மனுவின் அடிப்படையில் நான் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**